எல்லாம் நல்ல காலம்தான்


ௐ

# கோடி தரிசனம்




## நாடி வந்தால் கோடி நலம்

# கோடி தரிசனம்



ஓம் கோடீஸ்வராய நமக சிவ சிவ சிவாய நமக

# முன்னுரை

மனிதன் பரம்பொருளைத் தேட தன் வாழ்க்கையையே அர்பணிக்கிறான். இந்த தேடலுக்கு ஆன்மீகம் என்ற ஒரு கட்டுப்பாடான நல்ல வழி உறுதுணையாகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

பரம்பொருளை பல்வேறு வடிவங்களில் சமைத்துத் தன் கருத்துக்கு ஏற்ப ஆராதனை செய்து மகிழ்வதில் தம் பிறவிப்பயனை அடைந்ததாக ஒரு சாரார் சாந்தம் கொள்கின்றனர். இன்னொரு சாரார் பரம்பொருளை வடிவத்திற்குள் கொண்டுவராமல் அதன் முழுமையையும் உணரத் துடிக்கின்றனர். வேறு சிலரோ பரம்பொருளை உணரத் தேவையில்லை என்று தங்கள் தேடலை தங்களுக்குள்ளேயே புதைத்துக் கொள்கின்றனர். உலகிலுள்ள அனைத்து மதங்களும் மனித சமுதாயங்களும் இக்கருத்தையே பல்வேறு விதங்களில் எடுத்துக்காட்டி வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைத் தர முயற்சிக்கின்றனர்.

இந்த ஆன்மீகத் தேடலுக்கு பலவகைகளில் மக்களுக்கு உதவிபுரிய மஹரிஷிகளும், சித்தர்களும் தங்கள் தவ வலிமையாலும், பரம்பொருளை உணர்ந்த பயனாலும்

மக்களுக்கு நல்ல வழிகாட்டிகளாய் இந்த உலகம் தோன்றிய நாள் முதற்கொண்டு சேவை புரிந்து வருகிறார்கள் என்று இந்து மதமும் வேத இதிகாசங்களும் ஆணித்தரமாக எடுத்துச் சொல்கின்றனர்.

இந்த வகையில், இந்த உலகில் வயது தன் வயது என்று தன்னை அடையாளம் காட்டிக் கொண்டு, மக்கள் சேவையே மகேசன் சேவை என்று தன்னை நாடி வந்தவர்களின் துயர்போக்கி, இன்னல் களைந்து, கோடி நலம்புரிய வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகே அவதரித்து இருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பொன்முடி கோடீஸ்வர ராம நாத சுவாமி என்கின்ற மஹாசித்தரைப் பற்றி அறிந்துகொள்ள நான் எடுத்துக்கொண்ட முதல் முயற்சியாக இந்த நூல் விளங்குகின்றது.

மஹானுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், அவருடன் கலந்துரையாடி எனக்குக் கிடைத்த தகவல்கள், அவரைத் தரிசிக்க வரும் அன்பர்களின் அனுபவங்கள் ஆகியவைகளின் அடிப்படையில் இந்த நூல் வழியாக அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததற்குப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பரம்பொருளின் அங்கமாகவே இந்த ஆன்மீகச் சுடரை உங்களுக்கு உணர்த்த வைப்பதில் நான் ஒரு கருவியாக அமைவதில் பெருமைகொள்கிறேன்.

- V. நாராயணமூர்த்தி

வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகே உள்ள சென்னப்பமலை பற்றி மக்கள் மத்தியிலே பரவலாக பேசவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆம்பூர் நகரத்திற்கு மேற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ள பாட்டூர் என்ற கிராமத்திற்கு ஒட்டினார் போல் அமைந்துள்ள இந்த குட்டிமலை பார்ப்பவர்களுக்குச் சென்னகேசவ ஈஸ்வரே படுத்திருப்பது போன்று காட்சியளிக்கும். இந்த ஞானமலை மக்களை கவர்ந்திழுக்கும் ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாக உருவாகத் தொடங்கிவிட்டது. அடுத்த 15 ஆண்டுகளில் மக்களின் குறைகளைக் களையவும் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக பல்வேறு ஆன்மீக திட்டங்களுடன் இந்த திருத்தலம் அமையப் போகிறது என்கிறார். அங்கே ஐக்கியம் கொண்டுள்ள, பல யுகங்கள் கண்ட, ஆயிரக்கணக்கான வயது நிரம்பிய மகா சித்தர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பொன்முடி கோடீஸ்வரர் ராமநாத சுவாமிகள்.

39 வயது நிரம்பிய ஸ்ரீ ராமநாத சுவாமியைப் பற்றி பாட்டூர் கிராமத்தில் பெரியதாக யாருமே நினைத்திருக்க முடியாது, பள்ளி படிப்பைப் பாதியிலேயே தவறவிட்டு ஒரு சிறிய சைக்கிள் ரிப்பேர் கடை வைத்திருந்த அந்த இளைஞரை அந்த கிராமம் 1994-வரை கண்டுகொள்ளாமலேயே இருந்ததில் ஆச்சரியம் இல்லை. ஆனால் ராமநாத சுவாமி அவர்கள், ஒரு குறிப்பிட்ட நேரங்களில் தமிழ் சித்தர்களில் ஒருவரான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பொன்முடி கோடீஸ்வாமி அவர்களால், கூடு விட்டுக் கூடுபாயும் சித்தர்களால் வடிவில் ஆட்கொள்ளப்பட்டு அவர் வேத இலக்கியங்கள், இந்து தர்ம கலாச்சாரங்கள், எளிய சித்த மருத்துவங்கள், உலக வளமை பற்றியெல்லாம் பேசத் தொடங்கியதும் பாட்டூர் கிராம மக்கள் அல்லாமல் அதனைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களும்

ஆச்சரியத்தால் வாயடைத்து இன்றைக்கு ராமநாத சுவாமி அவர்களை ஒரு மகா உன்னத நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது தான் உண்மை.

'தாத்தா' என்று மரியாதையாகவும், செல்லமாகவும், அழைக்கப்படுகின்ற இந்த மகாசித்தர் பாட்டூர் கிராமத்தில் புரிந்த சித்து விளையாட்டுக்களை அக்கிராம மக்கள் முதலில் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், பின்னர் அங்கே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் தாத்தாவிடம் மிகுந்த அன்பையும், பக்தியையும் ஏற்படுத்தியுள்ளது தெளிவாகப் புரிகிறது. தற்பொழுது சென்னப்பமலை அடிவாரத்தில் பொன்முடி ஈஸ்வரர் ஆலயம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. வாழ்க்கை நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு தமிழ் வரலாற்றில் சித்தர்கள் மக்களுக்காக எடுத்துரைத்த கருத்துக்களை நல்லொழுக்க நெறிமுறைகளை அனைத்துத் தரப்பு மக்களும் ஜாதி, மத கலாச்சார பேதமின்றி ஏற்றுப் பயனடைய ஒரு மகாமடமும் நிறுவப்பட்டு மக்கள் சேவையே மகேசன் சேவையாக தன் பணியைத் தொடங்கிவிட்டது.

மகா சித்தர் 'தாத்தா' சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் தன்னுடைய முன்யுக பிறவியில் பொள்ளாச்சி அருகே உள்ள புரவிப்பாளையம் என்ற சிறிய கிராமத்தில் அமைந்துள்ள ஒரு ஜமீன் சமஸ்தானத்தில் "பொன்முடி கோடீஸ்வாமி" என்ற பெயருடன் வாழ்ந்து வந்தார். தனுஷ்கோடியில் ஒரு தமிழ் சிற்றரசருக்குப் பொன்முடி என்ற இயற்பெயரில் முத்த மகனாய்ப் பிறந்து தன் 13-ம் வயதில் வீட்டைத் துறந்து பல்வேறு தேசங்களுக்கு விஜயம் செய்து தன்னுடைய ஆன்மீக வாழ்க்கையைத் துவக்கியதாக தாத்தா கூறுகிறார். கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேலாக தனுஷ்கோடி

நகரத்தில் தாத்தா தன் ஒற்றைகாலில் நின்று கொண்டு தவம் புரிந்ததை நேரில் கண்டதாக அப்பகுதி மக்கள் பலபேர் கூறுகின்றார்கள். ஆனால் புரவிப்பாளையத்தில் தாத்தா தன்னை ஜமீன் சமஸ்தானத்தில் இணைத்துக்கொண்டு அங்கே வாழ்ந்த 49 வருடங்களில் தான் தாத்தாவினுடைய அருளாசி வெளிமக்களுக்குக் கிடைக்கத் தொடங்கியது. தன்னை நாடி வந்தவர்களுடைய உடல், மனம், தொழில் ரீதியான அத்தனை துயர்களை நீக்கித் தன் பக்தர்களின் ஆன்மீக தேடுதலுக்கு ஒரு நல்ல திசைதிருப்பி அருளாசியுடன் ஆன்மீக திருப்தியும் அளித்து கோடிக்கணக்கான மக்களின் துயர்துடைத்து வந்தார். ஆனால் புரவிப்பாளையத்தில் அவர் பேசியது மிகக் குறைவு மக்களுடன் கலந்துரையாடியது மிக மிக குறைவு.

அங்கே தன்னை நாடி வந்தவர்களுக்கு "எல்லாம் நல்ல காலம் தான்" என்று ஓரிரு வார்த்தைகளில் ஆசீர்வாதம் செய்வதுண்டு. உன்னிடத்தில் உண்மை இருந்தால் உன்னைத் தேடி நானே வருவேன் என்று உணர்த்த அவர் தன் தெய்வீக பார்வையால் பலரை பரவசப்படுத்தியதைப் புரவிப்பாளைய பக்தர்கள் மறந்திருக்க நியாயமில்லை.

கோடி ஸ்வாமியின் அருளாசிக்காகக் கோடிக்கணக்கான பேர் புரவிப்பாளையத்தில் தவம் கிடந்தது உண்மை. அவருடைய அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமாகி மிகவும் அடிமட்டத்தில் இருந்து பலபேர் இன்று சமுதாயத்தின் உயர்மட்ட அந்தஸ்தில் உலா வந்து கொண்டிருப்பதும் உண்மை. தாத்தாவினுடைய ஜீவ சமாதிக்குப் பிறகு அவரை நேரில் சந்திக்க இயலாது என்றும் அவருடைய அருளாசி இனிமேல் கிடைக்காது என்றும்

ஏக்கத்துடனும், துக்கத்துடனும் துவண்டு கிடக்கும் கோடிக்கணக்கான பக்தர்களுக்கு, கோடிஸ்சுவாமி தன்னுடைய ஆன்மா வழியில் சென்னப்பமலை திருத்தலத்தில் புரவிப் பாளையத்தில் அருள் பாலித்ததை விட அதிகமாகவும் நெருக்கமாகவும் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு கோடி நலம் புரிந்திட தன் ஆன்மீக சேவையை மீண்டும் துவக்கியுள்ளார் என்கிற நற்செய்தி அவர்களுக்கு உயிர் ஊட்டம் அளிக்கப் போவது உறுதி.

புரவிப்பாளையத்தில் 423 வருடம், 9 மாதம், 19 நாள் வாழ்ந்து, 1994-ம் வருடம் அக்டோபர் மாதம் 11 நாள் தாத்தா ஜீவ சமாதி அடைவதற்கு முன்னரே தனது அடுத்த கட்ட ஆன்மீக வாழ்க்கைக்கு சென்னப்பமலையை தேர்ந்தெடுத்தவிதம் மெய்சிலிர்க்க வைக்கிறது. சுமார் 1600 வருடங்களுக்கு முன்னால் இந்த சென்னப்பமலை திருத்தலத்தில் சித்தர்கள் கூடி தவம் புரிந்ததாகவும், தனது குரு ஸ்ரீ ஆதி சங்கரர் கேரளத்தில் உள்ள காலடியில் இருந்து கைலாயம் நோக்கிச் செல்லும்போது இம்மலையில் 9 நாட்கள் தங்கி அங்கே உள்ள சென்னகேசவ பெருமாள் ஆலயத்தில் பூஜித்ததாகவும், அதனால் தனது அடுத்த ஜன்ம சேவையை இத்திருத்தலத்தில் தான் செய்ய வேண்டும் என்று அன்றே நிர்மாணம் செய்யப்பட்டதாகவும் தாத்தா கூறுகிறார்.

ஆதி சித்தர் அகத்தியரையும், ஆதி சங்கரரையும் தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டுள்ள தாத்தா தன் குரு ஆதிசங்கரர் தனக்கு குரு அந்தஸ்து கிடைக்கச் செய்ய சென்னப்பமலைக்கு தான் செல்ல வேண்டும் என்று பணித்ததாகவும் தன் சீடராக ஸ்ரீ ராமநாத சுவாமி அவர்களை அவரே தேர்வு செய்ததாகவும் மகிழ்ச்சியுடன் கூறுகிறார். தாத்தா புரவிப்பாளையத்தில் இருந்து

கொண்டு 1994-ம் ஆண்டு மாசி மாதம் மஹாசிவராத்திரி அன்று புதன்கிழமை காலை தான் தேர்வு செய்த சீடரான ஸ்ரீ ராமநாத சுவாமி அவர்களுக்கு ஞானத்தால் காட்சியளித்தார்.

பின் பங்குனி மாதத்தில் ஸ்ரீ ராம நாத சுவாமி தன் குடும்பத்துடன் புரவிபாளையம் சென்று "தானே தன்னை தேடி வந்து" தன் குருநாதர் மடியில் விழுந்து, உடலாலும், குரலாலும் பேச ஆத்ம பலம் மற்றும் மந்திரோபதேசம் அருளப்பெற்று சீடராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஸ்ரீ ராமநாத சுவாமி தன் உடலை தியாகம் செய்து தன் குருவை அவர் கூட்டிற்குள் வர செய்து தாத்தாவிற்கு ஒரு நல்ல சீடராக தன் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்து தன் குடும்பத்திற்கும் மனித குலத்திற்குமே பெருமை சேர்க்கிறார். தாத்தா தன் உடலை பயன்படுத்தாத நேரங்களில், சாதாரண மனிதராக தன் மனைவி, மக்கள், குடும்பத்தினருடன் கலந்து வாழ்வதில் சுவாமிக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

தனுஷ்கோடியில் பிறப்பதற்கு முன்பு சுமார் 4440 வருடங்கில், 4 யுகங்களில், 4 வெவ்வேறு பிறவிகளில் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்ததாகத் தாத்தா கூறுகிறார். ஒரு யுகத்தில் தாத்தா இலங்கை யாழ்பான பகுதியில் "கடைகோடி சுவாமி" என்ற பெயரில் தன்னை நாடி வந்தவர்களின் துயர் தீர்க்க தன் ஆன்ம பலத்துடன் ஆன்மீக சுவை கலந்து வாழ்ந்ததாகச் சரித்திர ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. தாத்தாவும் இதை மிகுந்த தன்னடக்கத்துடன் ஒத்துக்கொள்கிறார்.

இதற்கு முன்னர் வட இந்தியாவில் பல்வேறு இடங்களில் "பாபாஜி" என்ற பெயரில் இருந்ததாகவும். அதற்கு முன் தான் "பாம்பாட்டி சித்தர்" என்ற பெயரில் பல நூற்றாண்டுகள்

தென்னிந்தியாவில் இறைப் பணியுடன் மக்கள் குறைதீர்க்க வாழ்ந்து வந்ததாகவும் தாத்தா கூறுகிறார். இதை புரவிப்பாளையத்தில் அவரைச் சந்திக்க வந்த பக்தர்களிடம் தாத்தா தனக்கு "இந்த உலகத்தின் வயது" என்று கூறியதோடு ஒப்பிட்டு பார்க்கும் போது இந்த மகானின் புண்ணிய அவதாரத்தின் முழுப் பயன் நமக்கு புரியலாம்.

சுமார் 1 ஏக்கர் பரப்பில் ஆலயப் பணிகள் துவங்கப்பட்டு தாத்தா அருளாசி வழங்க பிரம்மாசாரம் கலந்து ஒரு மஹாமடமும் இந்த சென்னப்பமலை அடிவாரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இயற்கை வளம் மேம்படுத்த, மக்கள் நலம் காக்க, உலக அமைதி, தர்மம் நிலைத்திட பஞ்சபூதங்களைக் கட்டுக்குள் நிறுத்தி யாகங்கள், ஹோமங்கள், தெய்வீக ஆராதனைகள் போன்ற மிகப்பெரிய சமுதாய சேவைகள் தாத்தாவால் நடத்தப் பெற்றுவருகின்றன. புரவிப்பாளையத்தில் தாத்தா தங்கியிருந்த நாட்களில் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்கி அன்னதானம் மேற்கொள்ளக் கட்டளையிட்டவர், இங்கே சென்னப்பமலையில், தன் மற்றொரு பிறவியில் மக்களின் நோய் தீர்க்கும் சித்த மருத்துவமுறைக்கு முக்கியத்துவம் வழங்கி வருகிறார்.

நவீன வைத்திய முறைகளால் கைவிடப்பட்ட உடல் கோளாறுகளுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் மகாசித்தர்கள் மட்டுமே போற்றிப் பயன்படுத்தி வந்த அரிய மூலிகை வைத்தியம் இங்கே இன்னல்படும் மனித குலத்திற்கு இலவசமாக கிடைத்திட தாத்தா வழி செய்து வருகிறார். தன்னை "நாடி வருவோர்க்கு கோடி நலம் கிடைத்திட" இந்த சித்தர் தன் தெய்வீகப் பணியை துவங்கிவிட்டார். சித்த மருத்துவம் அனைவர்க்கும் கிடைத்திட

ஏதுவாய் சென்னப்பமலையில் சுமார் 2 ஏக்கர் பரப்பில் ஒரு மூலிகைப் பண்ணையும் வெகுவிரைவில் நிறுவப்பட இருக்கிறது.

சென்ன கேசவ ஈஸ்வரரே மோனதவத்தில் படுத்திருப்பது போல காட்சியளிக்கும் இந்த சென்னப்ப மலையில் சுமார் 1600 வருடங்களுக்கு முன்னால் விஜயம் செய்த ஸ்ரீ ஆதிசங்கரர் வரண்டு கிடந்த இந்த பிரதேசத்திற்கு வாழ்வளிக்க தன் திருக்கரங்களால் பன்னீர்ச் சொம்பு கொண்டு உருவாக்கிய குளம் ஒன்று இன்றும் வற்றாத நீருடன் அமைந்திருப்பது இங்கே விசேஷம். தான் உருவாக்கிய இந்த குளத்திலிருந்து நீரை எடுத்து பரமனுக்கு வழிபாடு நடத்தியதால் இக்குளத்திற்கு "பன்னீர் தீர்த்தம்" என்ற பெயரும் இந்த நீர் கங்கைக்கு சமமானது என்றும் இந்த புனித நீரைப் பருகுபவர்கள் தங்களது உடல் ரீதியான கோளாறுகளைக் களைந்து மன நிம்மதி அடைவர் என்கிறார் தாத்தா.

ஒரு நல்ல சமுதாயத்தின் அடிப்படையாக விளங்கும் குழந்தைகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக, விஞ்ஞானமும், மெய்ஞானமும் தேச பக்தியுடன் இணைந்து ஆன்மீகக் கல்வி அளித்திட ஒரு குருகுலமும் அமைத்திட தாத்தா முயற்சி செய்து வருகிறார். பக்தர்களின் நன்மைக்காக யோகாசனப் பயிற்சியும் அளிக்க ஓர் அமைப்பு, குழந்தைகள் விளையாட ஓர் அரங்கம், ஆன்மீக வளர்ச்சிக்கான ஓர் ஆராய்ச்சி மையம், கல்விக் கூடங்கள் போன்றவைகளும் இங்கே கூடிய விரைவில் இடம்பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடல், மனம், தொழில் ரீதியான எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக, ஒரு நல்ல

மருத்துவராக, ஒரு நல்ல ஆசானாக, ஒரு நல்ல நண்பராக, ஒரு நல்ல குடும்பத்தலைவராக தாத்தா விளங்கி வருவது கண்கூடாகப் புலப்படுகிறது. சென்னப்பமலையில் தாத்தா வாழும் இந்த புண்ணிய பூமியில் தம் பாதம் பதித்தாலே வருபவர்களின் அனைத்துப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடுவதாக நம்பப்படுகிறது. உடல் கோளாறுகளின் தீவிரத்திற்கு ஏற்றவாறு தாத்தா தன் கைகளாலோ அல்லது கால்களாலோ நோயாளிகளை தொடுவதாலே பெரும்பாலான கோளாறுகள் தீர்ந்துவிடுவதாகச் சென்னப்பமலைக்கு வருகின்ற பலபேர் உறுதிபடக் கூறுகிறார்கள். அதிக தீவிரம் வாய்ந்த நோய்களுக்கு தன் வாயில் இட்டு எச்சில்படக் கொடுக்கும் பழங்கள், உணவு வகைகள் ஆகியவையே நோய் தீர்க்கும் மருந்தாக செயல்படுகிறது. அதையும் கடந்த நோய்களுக்கு தாத்தா தன் கைப்பட மூலிகைகள் மூலம் சிகிச்சை அளிக்கிறார்.


ஆயிரக்கணக்கானோர் தங்கள் நோய் தீர்ந்த விதம் பற்றிய ஆச்சரியம் கலந்த ஆனந்தத்தோடு திரும்பிச் செல்வது இங்கே ஒரு சாதாரண நிகழ்ச்சியாக இருக்கிறது.

விதிப்பயனை மாற்றமுடியாது, ஆனால் விதிப்பயனால் ஏற்படும் பாதிப்புகளை தன்னால் தள்ளிப்போடவோ அல்லது குறைக்கவோ முடியும் என்கிறார் தாத்தா. தன்னை நாடி வந்தவர்கள் அவர்களின் பிரச்சனைகளின் தீவிரத்தை அவர்களே உணராவண்ணம் பரமனின் துணையோடு ஒரு நல்ல தீர்வு கிடைக்க தான் ஒரு வழி காட்டியாக, சுமை தாங்கியாக அமைவதில் தாத்தா பெருமை கொள்கிறார்.

பரம்பொருளின் அங்கமாகவும் சிவனின் தூதராகவும், பரமனின் உதிரத்தில் பூத்த மலராகவும் தன்னை அடையாளம்

காட்டிக் கொள்ளும் இந்த ஆன்மீகச் சுடர் சென்னப்பமலையில், மக்கள் இன்னல் தீர மக்கள் நல்லொழுக்கப் பாதையில் இட்டுச்செல்ல தன்னுடைய ஆன்மீகப் பயணத்தை மீண்டும் தொடங்கியுள்ளது. தோண்டத் தோண்ட கிடைக்கும் புதையல் போல தாத்தா தன் பக்தர்களுக்கு பல வகைகளில் உடனிருந்து ஒரு நல்ல ஒழுக்கப்பாதைக்கு வழிகாட்டி வருகிறார்.

இந்த தீர்க்க தரிசிக்குள் ஆழ்ந்துள்ள ஆன்மீகப் புதையலை நம்மால் புரிந்துக்கொள்ள முடியுமோ ? முடியாதோ ? ஆனால் அவருடைய தெய்வீகப் பார்வையில் நம்மையே நாம் ஓரளவிற்கு புரிந்து கொள்ள முடியும் என்று நம்பலாம். வாருங்கள் சென்னப்பமலைக்கு!


ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பொன்முடிகோடீஸ்வர
ராமநாத ஸ்வாமி மஹாமடம்
பாட்டூர், சென்னப்பமலை, (ஆம்பூர் அருகில் )
வேலூர் மாவட்டம்.
எல்லாம் நல்ல
காலம்தான்